# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 189/2012

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | செந்தில் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | பச்சமுத்து (எ) பச்சியண்ணன் | தொழில் | .. | விசைதறி |
| வயது | .. | 33 | ஜாதி | .. | வன்னியர் |
| கிராமம் | .. | சுண்டமேட்டுர் | நாள் | .. | 21.12.2021 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. செந்தில் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.1 – செந்தில் - 4 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

என்ன படித்துள்ளீர்கள் என்றால், பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். உங்களுக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால், தெரியும். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியும். ஏ.ஏ. பாலு, வடிவேலு, சின்னப்பொன்னு மற்றும் அழகப்பன் என்பவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் உங்களுக்கு உறவினர்களா என்றால், உறவினர்கள். 1 முதல் 5 வரையிலான வாதிகளும் எனக்கு உறவினர்கள் என்றால், சரிதான். பிரதிவாதிகள் உங்களுக்கு என்ன உறவுமுறை என்று சொன்னால், அழகப்பன் என்பவர் சித்தப்பா ஆவார் மற்றும் சின்னப்பொன்னு எனது அம்மா ஆவார், ஏ.ஏ. பாலு எனது அண்ணன் முறை ஆவார், வடிவேல் என்பவர் எனது உறவுக்காரர் இல்லை. 4 ஆம் பிரதிவாதி உறவினர் என்று சொல்வது தவறு என்றால், சரிதான். வழக்குச்சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால், சர்வே எண்.108 இல் உள்ளது. வழக்குச்சொத்து ஒரே சர்வே எண்ணில் மட்டும்தான் உள்ளது என்றால், சரிதான். வழக்குச்சொத்தின் சக்குபந்தி விபரங்கள் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அம்மா பிரதிவாதி சின்னப்பொன்னு என்பவர் என்னுடன்தான் தங்கியுள்ளார் என்றால், சரிதான்.

வழக்குச்சொத்து கிரயத்தின் மூலமாக குமாரசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். குமாரசாமி என்பவர் 29.08.2008 இல் 3 ஆம் பிரதிவாதிக்கு ஒரு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால், சரிதான்.

4 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி வா.சா.1 இன் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / செந்தில்

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.